24 APR 1997

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 4

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 18- 4 - 1997 10 இதழ்:

நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள்; துன்மார்க்கர் ஆளும்போதோ ஜனங்கள் தவிப்பார்கள்.

நீதிமொழிகள் 29: 2

# வாலிபர் ஒன்றிப்பு 1997

## உடுவில் மகளிர் கல்லூரியில்

வாலிபர்க்கான வருடாந்த வாலிப ஒன்றிப்பு உடுவில் மகளிர் கல்லூரியில் ஏப்பிறல் 11ம் திகதி தொடக்கம் 14ம் திகதி வரை நடைபெற்றது. இதில் மெதடிஸ்ற், அங்சிலிக்கன், தென்னிந்திய திருச்சபைகளின் வாலிபர்கள் கலந்து கொண்டார்கள். "இயேசு கிறிஸ்துவில் நற்சீடராகுவோம்" என்பதே இவ் வாலிப ஒன்றிப்பின் மகுட வாக்கியமாகும்.

இவ்வாலிப ஒன்றிப்பில் வேதப்படிப்பு, பாடல்கள், கலந்துரையாடல், கேள்வி நேரம் விறுவிறுப்பான விளையாட்டுக்கள், பாடல் போட்டிகள், நாடக போட்டிகள், என்பன இவ் ஒன்றிப்பினை மெருகூட்டின இவ்வொன்றிப்பு மூலம் வாலிபருக்கு சிந்திக்க ஒரு தருணத்தை அளித்தது. சுவையான விறுவிறுப்பான நிகழ்சிகள், புளிக்க, இனிக்க வகையான சாப்பாடுகள் என்பன வாலிபரை மேலும் உற்சாகப் படுத்தியது.

ஏப்பிரல் 13ம் திகதி மூன்று திருச்சபைகளும் ஒன்றிணைந்து நற்கருணை ஆராதனையை நடாத்தின. அருட்திரு V. இராஜ்குமார் (C.S.I.) அருட்திரு S.S. கருணைராஜ் (மெதடிஸ்ட்) அருட்திரு. S.P. நேசகுமார் (அங்கிலிக்கன்) ஆகியோர் ஆராதனையை நடாத்தினார்கள். திரு. R. ஹரிஹரன் இறை செய்தியை வழங்கினார்.

இவ்வாலிப ஒன்றிப்பை அருட்திரு S.S. கருணைராஜ், அருட்திரு S. P. நேசகுமார், J. ஜெபமோகன் அருட்திரு S.S. டெரன்ஸ், அருட்திரு S மில்டன். திரு. R ஹரிஹரன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக இருந்து மிகச்சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்கள்.

## நன்றி செலுத்தும் வழிபாடு

காலஞ்சென்ற தமிழினத்தந்தை S.J.V. செல்வநாயகம் அவர்களின் வாழ்வுக்கும் சேவைக்கும் நன்றி செலுத்தும் ஆராதனை சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயத்தில் 31-3-97 அன்று நடைபெற்றது. வண. S. P. நேசகுமார் தலைமையில் நடைபெற்ற இவ் வழிபாட்டில் பாராட்டுரைரையை முன்னாள் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதி வண கலாநிதி டி. ஜே. அம்பலவாணரும், மறையுரையை கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ் மறைமாவட்ட ஆயர் அதி வண தோமஸ் சவுந்தரநாயகமும் வழங்கினார்கள்.

பாராட்டுரையில் தந்தை செல்வாவில் காணப்பட்ட கிறிஸ்தவ தலைமைத்துவ பண்புகள் எடுத்துக்கூறப்பட்டது. தமிழர்கள் இலங்கையில் சுய மரியதையுடன் வாழக்கூடிய அரசியல் கட்டுக்கோப்பை உருவாக்கவேண்டும் என்பதை தம் நோக்கமாக கண்டு கொண்டார் செல்வா. அந்த நோக்கமும் அவரைக் கண்டு கொண்டது. காற்று வீசும் நிலையில் சுழலும் காற்றுத் திசையறி கருவி போன்று வாழும் அரசியல் வாதிகள் மத்தியில் செல்வா, தன் இலட்சியத்தை நிறைவேற்றுவதில் அசாத்திய நம்பிக்கையுடன் செயல் பட்டார். என பேராயர் அம்பலவாணர் கூறினார்.

ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தம் மறையுரையில், செல்வா அரசியலில் இதய சுத்தியுடனும் கருமசுத்தியுடனும் செயற்பட்டவர் என்றார். மேலும், தியாகமில்லாத வழிபாட்டையும், கொள்கையற்ற அரசியலையும் அர்த்தமற்றது என மகாத்மா காந்தி கருதினார். குழ

(3ம் பக்கம் பார்க்க)

## இலவச வகுப்புகள் DCC Kudattanai

தை மாத 15. 1. 97 லிருந்து ஆண்டு 8 தொடக்கம் 11 வரை இலவச கணித, விஞ்ஞான, ஆங்கில வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இதனால் வடமராட்சி கிழக்கு பகுதியில் வசிக்கும் மாணவர்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றார்கள். இம் முயற்சி திட்டப் பணிப்பாளர் திரு. வி. மித்திரரஞ்சனால் ஊக்குவிக்கப் பட்டு வருகிறது.

## புதிய பகல் பராமரிப்பு நிலையம்

நாகர் கோவில் பகுதியில் புதிதாக பகற்பராமரிப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது இந் நிகழ்வு மாசி மாதம் திங்கட்கிழமை 17- 2- 97 அன்று முற்பகல் 10 மணியளவில் சேகரக்குரு வண S I. ஆனந்தராஜா அவர்களினால் சம்பிரதாய பூர்வமாக இறை ஜெபத்தோடு திறந்து வைக்சப்பட்டது. இதன் பின்னர் வருகை தந்த பெற்றோர், ஆசிரியர்கள், பிள்ளைகள், நலன்விரும்பிகள் யாவருக்கும் தேனீர் விருந்து வழங்கப்பட்டது.

இந்நிலையம் திறக்கப்படுவதனையிட்டு பாராட்டி, நாகர் கோவில் மகா வித்தியாலய (MV) அதிபர் திரு. மகேந்திரன் கிராம சேவையாளர் திரு. தர்மகுலசிங்கம் சபைப்போதகர் வண T. E அசோக்குமார், சேகரக்குரு வண S. I. ஆனந்தராஜா உட்பட கிராமத்து பெரியோர்களும் உரையாற்றினார்கள்- இறுதியாக வண S I, ஆனந்தராஜா அவர்களின் ஜெபம், ஆசீர்வாதத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

## பழுதடைந்த வீதியில் நிற்கும் பஸ்கள்

பருத்தித்துறை -யாழ்ப்பாணம் வீதியில் சேவையிலீடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்வண்டிகள் அடிக்கடி பழுதடைந்த வீதியில் நின்று விடுகின்றன. இதனால் பஸ்களில் பயணம் செய்வோர் இடைவழியில் தர்மசங்கடமான நிலையை எதிர்நோசக வேண்டியேற்படுகிறது.

## சிறிமாவுக்கு வயது 82

பிரதமர் சிறிமாவே பண்டார நாயக்கா தமது 81வது வயதை நேற்று (17.4-97) பூர்த்தி செய்தார்.

## சேத மதிப்பீடு

கடந்த கால இராணுவ நடவடிக்கையினால் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு ஏற்பட்ட சேதங்களின் மொத்தப் பெறுமதி பத்து லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

## லிபியா மாநாட்டில் ஆராய்வு

லிபியாவின் தலைநகர் திரிபோலியில் நடைபெறுகின்ற உலக சமாதானத்துக்கும் ஒருமைப்பாட்டுக்குமான நான்காவது மாநாட்டில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் பற்றி நீண்ட நேரம் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. இந்த மாநாடு ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றது.

## படகின் மீது சூடு

அனலைதீவிலிருந்து நெடுந்தீவுக்கு வந்து கொண்டிருந்த புதுமணத் தம்பதியரின் படகு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது. கடந்த புதன் கிழமை நெடுந்தீவுக் கடலில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது. துப்பாக்கி பிரயோகத்தின் காரணமாக படகில் சன்னங்கள் பாய்ந்து சிறு உடைவுகள் ஏற்பட்டது என்றும் பயணிகள் எவரும் காயங்களுக்கு உள்ளாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## யாத்திரிகர் 250 பேர் மரணம்

சவுதி அரேபியாவின் மக்கா நகரில் புனித கடமையை நிறைவேற்றுவதற்காக சுமார் 20 இலட்சம் ஹஜ் யாத்திரீகர்கள் திரண்டிருந்த பகுதியில் இடம் பெற்ற மிக மோசமான தீ விபத்தால் 250க்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் உடல் கருகிப் பலியானார்கள். சுமார் 1300 பேர் காயமடைந்தனர். யாத்திரிகர்கள் தங்கியிருந்த 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூடாரங்கள் தீயில் எரிந்து சாம்பாராகின.

## வருடாந்தக் கூட்டம்

இலங்கைத் தேசிய இளைஞர் கிறிஸ்தவ சங்கத்தின் (YMCA) 32 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 26ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள.

# திருச்சபை ஐக்கியத்தின் பொன் விழா ஆண்டு 1947 - 1997

# மார்ட்டின் லூதர்

## லூதரின் வாழ்க்கைக் குறிப்புகள்

1483ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி பிறந்த மார்ட்டின் லூதர் தனது திருமுழுக்கினை தான் பிறந்த இடமான கிழக்கு ஜேர்மனியிலுள்ள ஐஸ்லீபன் எனும் சிற்றூரிலுள்ள ஒரு தேவாலயத்தில் பெற்றுக்கொண்டார். 1505ம் ஆண்டு தனது 22 ஆவது வயதில் வீதியால் நடந்து கொண்டு வந்த போது புயல் வீசத் தொடங்கியது "புனித அன்னாளே நீர் என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் சபை மடத்துறவியாகி விட வாக்குக் கொடுக்கிறேன்" என வேண்டிக் கொள்கிறார். பள்ளி வாழ்க்கையை முடித்துக்கொண்ட அவர் துறவியர் மடத்திலும், பல்கலைக்கழகத்திலும் மேற்படிப்பு படித்த பின்னர் இறையியல் பேராசிரியராகப் பணி ஆற்றினார்.

தனது சிறு பராயத்திலிருந்தே இயேசுவை ஒரு கடுமையான தீர்ப்பளிக்கும் ஒருவர் என்பதாக அறிந்து கொண்ட மார்ட்டின் லூதர் இயேசு எனும் பெயரைக் கேட்டாலே தான் பயந்து நடுங்குவதாகக் கூறினார். இதற்குக் காரணம் அவர் பள்ளியில் பெற்றிருந்த போதனைகள் தான். தமைப் பற்றி "நான் ஒரு விவசாயி பரம்பரை" என அடக்கத்தோடு கூறுகிறார். இந்த பின்னணியுடன் துறவிமடப் பள்ளி வாழ்கைை ஆரம்பமானது. தனது 24 வயதில் துறவியாக அருட்பொழிவு பெற்று விட்டன்பர்க் பல்கலைகழகத்தில் பேராசிரியராகிறார். ரோமர் நிருபத்தை ஊன்றிக்கற்ற லூதருக்கு "விசுவாசத்தால் நீதிமான பிழைப்பான்" எனும் வாக்கியம் மனதில் ஆழப்பதிந்தது.

அத்தகுநிலையில் துறவியர் மடப்பிரதிநிதிகளாக அவரும், இன்னொருவரும் ரோமத்திருச்சபையின் மேலிடத்திற்கு அனுப்பப்பட்டனர். அங்கு இருந்த நினைவு சின்னங்களை பக்தியுடன் பார்த்தார் லூதர். எருசலேமில் ஆண்டவர் விசாரணை செய்யப்பட்ட பிலாத்துவின் அரண்மனையின் 28 படிகள் ஆலயம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது. இந்தப்படியில் முழங்காலில் நின்றவாறு ஏறினால் ஒரு படிக்கு 9 ஆண்டுகளுக்கு பாவ மன்னிப்பு கிடைக்கும் எனும் நம்பிக்கை இருந்தது. முழங்கால் ஊன்றி ஏற ஆயத்தமான லூதரின் காதிற்குள் "விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்" எனும் வாக்கியம் ஓங்கி ஒலிக்க ஆரம்பிக்கிறது. எனவே அவற்றில் ஏறாது திரும்பி வந்து விடுகிறார். ரோமாபுரியில் சபைத் தலைவர்களால் ஒழுக்கக்கேடு நிலவுவதாகவும், பாவத்தைப் பற்றி பயமின்றி மக்கள் வாழ்வதாகவும், தீயவர்கள் அங்கு சென்றால் அதிகளவு தீயவர்களாக திரும்புகின்றனர் என்றும் கூறினார் மார்ட்டின் லூதர்.

அடுத்த சில ஆண்டுகளில் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தில் பெருமதிப்பிற்குரிய இறையியல் பேராசிரியராக திகழ்ந்த லூதர் – ரோமாபுரிச்சபையின் செல்வாக்கு காரணமாக ஜெர்மனி திருச்சபை மக்கள் புனிதர் வழிபாடு நடத்துவதிலும், புனித சின்னங்களை பாதுகாப்பதிலும், பணம் கொடுத்து பாவமன்னிப்புச் சீட்டு வாங்கினால் பாவமற்றவர்களாக வாழலாம் எனும் மூடநம்பிக்கையிலும் வாழ்ந்ததைக் கண்ட லூதர் இவற்றை எதிர்த்து கடுமையாக உரையாற்றினார். 1517ம் ஆண்டு அக்டோபர் 31ம் திகதி அனைத்து தூயவர் நாளன்று விட்டன்பர்க் தலைமை தேவாலயத்தின் கதவில் தமது வரலாற்றுப் புகழ் வாய்ந்த 95 அறிக்கையை பொது மக்கள் பார்வைக்கு விட்டிருந்தார். இது ஜெர்மனிய திருச்சபைத் தலைவர்களை, ரோமாபுரி மேலிடத்தாரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மட்டுமல்லாது நாடு முழுவதையுமே குலுங்க செய்து விட்டது

திருச்சபையின் உண்மையான அடித்தளத்தை மக்கள் காணும்படி செய்த லூதர் குற்றவாளியாக தீர்க்கப்பட்டு திருச்சபைத் தலைவர்களுடையஎதிர்ப்புகளுக்கும் நீதி விசாரணைக்கும் ஆளாகினார். பிற நாடுகளிலும் இவரது கருத்துகள் பெருமதிப்பு பெறத்தொடங்கின. தங்கள் ஆதரவினைத் தர முன் வந்தார்கள்.

சமயத்தலைவர்கள் கடவுளின் அதிகாரத்தை விட தமக்கு தரப்பட்டுள்ள அதிகாரம் பெரிது என்று கருதியமையை அவர் எதிர்த்தார். வேதாகமத்தைப்படிக்க குருமாருக்கே உரிமை என்ற போதனையை கண்டித்த லூதர் யாவரும் கடவுளின் ஆசாரியரே. அவரது வார்த்தைகளைப் படிப்பதற்கு யாவருக்கும் உரிமையுண்டு என்று சாதித்தார். "இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு மேம்பட்ட அதிகாரம் இல்லை: வேறு அதிகாரங்கள் பிசாசின் தந்திரங்கள்" என்றார். கிறிஸ்தவனின் உரிமைப் பேறுகள்' எனும் தலைப்பில் எழுதியுள்ள புத்தகத்தில் மனிதனின் ஆன்மா கடவுளது வார்த்தையை தன்னகத்தே கொண்டிருந்தால்



அவர் காலத்தில் வாழ்ந்த ஏராஸ்மஸ் எனும் அறிஞர் அவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் "உங்கள் நூல்கள் பெரும்பரபரப்பை உண்டாக்கியுள்ளது. இங்கிலாந்தில் வாழும் ஆங்கிலேய அறிஞர்கள் உங்கள் நூல்களை விரும்பிப்படிக்கிறார்கள். உங்களது அஞ்சாமையைப் பலரும் வியந்து போற்றுகிறார்கள்" என எழுதியுள்ளார். இவரது நூல்களின் மூலமாக ஜெர்மன் நாட்டு பணக்கார அரசியல் தலைவர்களும், பகுத்தறிவாளர்களும், இறையியல் சிந்தனையாளர்களும், சில துறவிகளும் அவருக்கு அதற்கு எவ்வித குறையும் இராது என்று எழுதுகிறார்.

லூதரை சமயசீர்திருத்த வாதியாக மட்டுமல்லாது, ஜெர்மன் மொழிக்கு வளம்கூட்டிய அறிஞர்களுள் ஒருவராகவும் கருதுவர் 'வார்ட்பர்க்' எனும் இடத்திலுள்ள ஒரு குகையில் இருந்தபோது, விவிலிய நூலை இலத்தீன், எபிரேயம் கிரேக்கம் ஆகிய மொழிகளிலிருந்து பெயர்த்து ஜெர்மனியில் பரவலாக பயன்படுத்துகின்ற பதிப்பை உருவாக்கித் தந்திருக்கிறார். பல இசைப்பாடல்களை இயற்றி தந்துள்ளார். அவற்றுள் உலக புகழ் வாய்ந்த "A mighty Fortress; From Depths of awe; I raise to thee" போன்ற பாடல்களை சங்கீதம் 46, 130 என்பனவற்றை தழுவி எழுதினார்: ஜெர்மனிய இலக்கிய திறனாய்வாளர்கள் இவரை ஒரு சிறந்த இலக்கியவாதி என்கின்றனர். சமுதாய, அரசியல், கல்வித்துறை தீரராக போற்றப்படுகின்றார். மத்தியதர வகுப்பின் சார்பில் குரல் எழுப்பியவர் எனவும் ஏழைமக்களின் இறையியலை உருவாக்கித் தந்தவர் எனவும் போற்றப்படுகின்றார். பண்ணையாளர் ஆட்சிச் சூழலில் "திருச்சபைகளுக்கு சொந்தமான நிலங்களை விற்று அவற்றை ஏழைகளுக்கு வழங்க வேண்டும்" என்ற கருத்தை துணிந்து கூறினார்.

## "உங்களவன்"

திருச்சபை வரலாற்றில் பெருந்திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியதோடு புதிய சீர்திருத்த சபைக்கும் வித்திட்டவர் அவரே. 1544ம் ஆண்டு கத்தோலிக்க சபையிலிருந்து பிரிந்து முதல் சீர்திருத்த சபையை ஏற்படுத்தினார். இவரது அடிச்சுவட்டை பின்பற்றித்தான் ஜான் கல்வின், சிவிங்குலி, ஜான் நாக்ஸ் போன்றோர் ஐரோப்பிய நாடுகளில் சீர்திருத்த சபைகளை ஏற்படுத்தினர். இந்த இடத்தில் பொதுவுடமைக் கொள்கை நிறுவுனர் கார்ல்மாக்ஸ் கூறிய கருத்தான "லூதரின் சபை சீர்திருத்த புரட்சியைத் தொடர்ந்தே இங்கிலாந்தில் 17ம் நூற்றாண்டில் தொழிற் புரட்சியும், 18ம் நூற்றாண்டில் பிரெஞ்சுப் புரட்சியும், அதற்கடுத்த நூற்றாண்டில் அமெரிக்க சுதந்திரப்போரும் இடம்பெற்றது" என்பது குறிப்பிடத்தக்கது. இந்த போராட்ட வீரரின் முயற்சிகளை நசுக்கும் வகையில் லூதருக்கு எதிராக பாப்பரசர் ஆணை பிறப்பித்து, திருச்சபையிலிருந்து விலக்க முற்பட்டபோது. இது "அந்திக் கிறிஸ்துவின் ஆணையே" என துணிந்து கூறிய மார்ட்டின் லூதர் பாப்பரசர் ஆணையை தீயிட்டு கொழுத்தினார். நீ பாப்பரசருக்கு எதிராக எழுதியவைகளை திரும்ப பெறு என கேட்டபோது "என் மனச் சாட்சிக்கு எதிராக எதுவும் செய்யேன்" என வாங்க மறுத்தார். 1521ம் ஆண்டில் திருச்சபையில் இருந்து விலக்கப்பட்டார். விலக்கப்பட்டு வாட்பெர்க் மாளிகைக்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கிருந்தவாறு திருமறை மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டார் லூதர் ரோமநிருபத்திற்கு எழுதிய ஜேர்மனிய மொழியிலான விளக்கவுரையை 200 ஆண்டுகளுக்கு பின் 1738ம் ஆண்டு மே 24ம் திகதி வாசித்த ஜோன் வெஸ்லி கிறிஸ்துவை தமது மீட்பராக ஏற்றது குறிப்பிடத் தக்கது.

தனது 41வது வயதில் ஒரு கன்னியாஸ்திரியை மணம் முடித்தார். லூதர் இல்லறத்தை வெகு சிறப்பாக அம்மையார் நடத்தினார் பலகாலம் வறுமையில் தவித்த அவரது 6 பிள்ளைகளில் மூன்று பிள்ளைகள் இறந்து போயினர். இன்னும் ஒரு வருடத்திற்கு மேல் உயிர் வாழமுடியாது 'என வைத்தியர்கள் கைவிரித்தபோது 'நான் சலங்கவில்லை' என்று உறுதி கூறினார் லூதர். தமது நண்பர்கள் இல்லத்

(3ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கைக் கலை என்பது மல்யுத்தம் போன்றதே அன்றி, நாட்டியம் போன்றதன்று. முதலில் உறுதியாக நிற்க வேண்டும். பிறகு திடீர்த் தாக்குதலை எதிர்பார்த்துத் தயாராக இருக்க வேண்டும்.

மார்க்ஸ் அரேலியஸ்

# உதயதாரகை

## மானிட நல்லுறவு

இன்றைய உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறுவகையான தீமைகளின் அளவு உயர்ந்து வரும் காலக்கட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். மனித இனம் சரித்திரத்தில் ஒரு போதும் இல்லாதவாறு மனித நல்லுறவின் அவசியத்தை உணர்ந்திருக்கிறது. இனங்களுக்கிடையிலும், சமயங்களுக்கிடையிலும், உலக நாடுகளுக்கிடையிலும் மனித நல்லுறவின் அவசியம் உணரப்படுகிறது.

எங்களுடைய சொந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுடனும், எங்கள் அயலவரோடும், எங்களது சொந்த மனித சமூகத்திலும், நாம் கொண்டிருக்கும் உறவை இட்டு மிக ஆழமாக சிந்திக்க இச்சமூகம், ஓர் முழுமைபெற்ற மனித சமூகமாக உருவாகுவதற்கு நாம் எதனை செயல்படுத்த வேண்டும்? அல்லது எதனை மாற்றியமைக்க வேண்டும்?

இயற்கையான சகலமும் எப்படியாக ஒன்றோடொன்று தொடர்புபட்டு ஒன்றில் ஒன்று தங்கியுள்ளதையும் எப்படி ஒவ்வொன்றும் நிலைநின்று மற்றவை வளர உதவி செய்கின்றது என்பதையும் மனிதனால் மாத்திரமே கண்டு உணர முடியும். ஒவ்வொரு மனிதனும் எப்படி ஒருவரோடு ஒருவர் தொடர்புபட்டவர்களாகவும், எப்படி ஒருவரில் ஒருவர் தங்கி இருப்பவர்களாகவும் எப்படி ஒருவர் தன்னைத் தானே மனிதப் பண்பு உள்ளவராக்கி மற்றவர்களுக்கு உரம் ஊட்டுகிறவராக திகழ்கின்றார் என்பதையும் மனிதனால் மாத்திரமே கண்டும் உணரவும் கூடியதாக இருக்கின்றது.

யாராகிலும் ஒருவர் துன்புற்றால் நாம் எல்லோரும் துன்பப்படுகின்றோம். யாராகிலும் ஒருவர் சீரழிக்கப்படும் போது நாங்கள் எல்லோரும் தாக்கப்பட்டு மனிதத் தன்மையில் குறைவுறுகின்றோம் மக்கள் எல்லோரும் ஒரே ஜனக்கூட்டம், என்ற மனப்பாங்கு வளரும் போது இந்த ஜனக்கூட்டத்தை ஓர் முழுமை பெற்ற சமூகமாக மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கும். மனிதரிடையே நல்லுறவினை வளர்க்கும் போது நன்மைக்காக நமது சக்தி எல்லாவற்றையும் செலவிட எமது உள்ளத்தை ஏவி விட வேண்டும்.

மற்றவர்கள் செய்யும் தவறுகளை மறந்து போவது பல வேளைகளிலும் கடினமாக உள்ளது. ஆகவே தான் சமூகத்து ஜனங்களுக்குள்ளேயே பூசல்கள் நீடித்த நாட்களாக நிலவி பல்வேறு மக்கள் குழுக்கள் ஒன்றோடொன்று சண்டையிடக் காரணமாக அவை அமைகின்றன. பதற்றம் விரைவாகப் பரவி அது பல வேளைகளிலும் தீவிர வன் செயலாக வெடிக்கின்றது. எங்களது இந்த மனித சமூகத்தில் வன் செயல்கள் நாளாந்தம் எப்படி இடம் பெறுகின்றன என்பது பற்றிய செய்திகள், பத்திரிகைகளில் வெளிவருகின்றன. முழுமை பெற்ற ஒரு சமூக அமைப்புக்காக நாம் பாடுபடும் வேளையில், ஒப்புரவாகுதலையும், அன்பையும் பற்றிய செய்தியை இயேசு கிறிஸ்துவானவர் எங்களுக்கு தந்தருளுகின்றார்.

"உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல
பிறரிடத்திலும் நீ அன்பு கூருவாயாக"

(மத். 22 : 39)

என அவர் கூறுகின்றார். "முன் உன் சகோதரனுடனும், சகோதரியுடனும், ஒப்புரவாகி பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" எனவும் இயேசுவானவர் எம்மிடம் கூறுகின்றார். மக்கள் ஒருவரோடொருவர் நல்லுறவுடன் சமூகத்தில் வாழவேண்டியதன் அடிப்படை அவசியத்தையே கடவுள் விரும்புகிறார் என்பதை இது எமக்கு புலப்படுத்துகின்றது.

# கடவுள் இருக்கின்றாரா?



து. யோசுவா சிவஞானம்
3ம் ஆண்டு,
இறையியல் கல்லூரி,
வட்டுகோட்டை.

கடந்த காலத்தில் தான் அன்பாக வளர்த்த தன் ஒரே ஆண் மகனை பட்டினி சாவுக்கு பறி கொடுத்த ஒரு தாயின் அலறல். கடவுள் "இருக்கின்றாரா? அவர் இருந்தால் இப்போது எங்கிருக்கிறார்? இந்த பட்டினி சாவை அவர் பார்த்துக்கொண்டிருக்கிறாரா? இது அந்த ஆண் மகனை இழந்த தாயாரின் அலறல் மட்டுமல்ல இன்று நமது தமிழ் சமூகத்தின் அலறலும் அதுவாகவே இருக்கிறது. இத்தகைய கேள்விக்கு ஒரு கிறிஸ்தவன் கொடுக்கும் பதில் 'கடவுள் உயிருடன் இருக்கின்றார் அதற்கு நாங்களே சாட்சிகள்" என்பதாகும். இவ் வார்த்தையானது இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் பேதுரு செய்த முதல் பிரசங்கத்தில் கூறுகின்றார் "கடவுள் இந்த இயேசுவை உயிருடன் எழுப்பினார் இதற்கு நாங்களே சாட்சிகள்" என்பதாகும்.

கிறிஸ்து உயிருடன் எழுந்து சுமார் 2000 ஆண்டுகள் ஆன போதிலும் இந்த 2000 ஆண்டுகளில் எப்போதெல்லாம் இந்த மனித இனம் கடவுள் இருக்கின்றாரா? என்ற கேள்வியை கேட்கின்ற போதெல்லாம் கிறிஸ்தவ சமயம் 'ஆம் கடவுள் இருக்கின்றார் அதற்கு நாங்களே சாட்சிகள்' என்ற பதிலை கொடுத்து வந்துள்ளது. இன்று தமிழ் சமூகம் தன் வாழ்வை இழந்து மனித மாண்பு நிறைந்த ஒரு வாழ்வை காண ஆசிக்கின்றது. ஆனால் இந்த உன்னதமான வாழ்வை காணும் இறைநம்பிக்கை அனேகரிடத்தில் இல்லை காரணம் கரிசனையும் அன்பும். நீதியும், நிறைந்த ஒரு கடவுள் இருக்கின்றார் என்றால் இந்த அவலம் நிறைந்த வாழ்வை பார்த்துக் கொண்டிருக்கின்றாரா? இது ஒரு நியாயமான கேள்வி தான். இதற்கு முழுமையான சரியான விடை கொடுக்க வேண்டிய பொறுப்பு கிறிஸ்தவ சமய தலைவர்களிடமே விடப்பட்டுள்ளது. இதற்கான சரியான விடையை இந்நூற்றாண்டில் கொடுத்தவர் அமெரிக்க இன விடுதலைக்காய் குரல் கொடுத்து தனது உயிரையே கொடுத்த மாபெரும் கிறிஸ்தவ தலைவர் அமரர் மார்ட்டின் லூதர்கிங்' ஆவார். இவரை போன்று கடந்த 2000 ஆண்டுகளாக நீதிக்காக குரல் கொடுத்து உயிரையே தியாகம் செய்த அனேகம் கிறிஸ்தவ தலைவர்கள் உண்டு நம் நாட்டிலும் இலைமறை காய்களாய் அனேகம் பேர் உண்டு.

மனித இனத்தின் மத்தியில் சமாதானத்தை உண்டு பண்ண மனிதன் மூலமே அதை செயலாற்ற இறைவன் விரும்புகின்றார் அதற்கான பிரதிநிதிகளே இன்றைய கிறிஸ்தவ தலைவர்கள் 'அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்'.

இன்றைய நமது சூழ்நிலையில் கடவுள் நம் வரலாற்றில் செயலாற்றுகின்றார், வாழ்கின்றார் என்பதற்கு "கடவுள் பாடுபடும் மக்களுடன் பாடு படுகின்றார்" என்று மட்டும் கூறிவிட்டு இருந்து விட முடியாது. இது கடவுளை அமைதி ஏற்படுத்தமுடியாதவராக காட்டி விடுதலாகும். கடவுள் பூமியில் அமைதியை ஏற்படுத்த விரும்புகின்றார். இவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பிரதிநிதிகள் தான் கிறிஸ்தவ தலைவர்கள் ஆவர். இதை ஆமோஸ் தீர்க்கனின் வாழ்வில் காணலாம். அநீதி நடக்கும் இஸ்ரவேலில் நீதியை நிலைநாட்ட ஆமோஸ் அனுப்பபடுகின்றார் இஸ்ரவேல் மக்கள் 'நீதியை நிலைநாட்ட நீ யார்?' என்ற கேள்வியை கேட்டபோது ஆமோஸ் 3: 8 'தலைவராகிய ஆண்டவர் பேசியிருக்க இறைவாக்கு உரைக்காதவர் எவர்?' என்று அம்மக்களுக்கு பதில் கொடுக்கின்றார்

கடவுளுடைய வாய் யார்? அவருடைய நாவு எவர்? அவருடைய கரங்கள் எது? இந்த கிறிஸ்தவ சமுதாயம் தானே. கடவுள் இந்த மண்ணில் அமைதியை ஏற்படுத்த அவையவங்களை செயற்படுத்த யார் முன்வரக் கூடும்? இந்த மாபெரும் பணிக்காக ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவ தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர் நாம் அனைவரும் இணைந்து செயற்பட்டால் நாளை நம் நாடு அமைதி பொங்கும் நாடாக விளங்கும் அப்போதுதான் கடவுள் இந்த வரலாற்றில் செயலாற்றுகின்றார் என்பதை அஞ்ஞானிகள் அறிந்து கொள்வார்கள்

மார்ட்டின்...

தில் கூடும் போது இறைவனை துதிக்கும பாடல்களை நன்றியுடன் பாடுவார் லூதர். தமது 40வது வயதில் இருந்தபோதே பலவீனமான நிலைககு தள்ளபபட்ட மார்ட்டின் லூதர் தமது 61ம் பிறந்த நாளை கொண்டாடினார். அதுவே அவரது இறுதி பிறந்த நாளாக அமைந்தது. அதற்கடுத்த நாள் தமது இறுதி உரையை ஆதியாகம விளக்கவுரையாக பல்கலைக்கழகத்தில் ஆற்றினார்.

1546ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ம் திகதியன்று தமது இறுதி அருளுரையை மத் 11: 25ல் பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை தோத்தரிக்கிறேன் என்ற வாக்கியத்தின் அடிப்படையில் ஆற்றி 'என் ஆத்துமாவை உம்மிடம் ஒப்படைக்கிறேன்" எனும் செபம் செய்து யோவான் 3:16ம் வசனத்தை வாசித்த பின் அவரது ஆவி பிரிந்தது. பெப்ரவரி 19ம் திகதி ஐஸ்லீபனிலுள்ள தூய அந்திரேயா ஆலயத்தில சிறப்பு ஆராதனை நடந்த பின் அவரது உடல் விட்டன்பர்க நகரத்திற்கு எடுத்து செல்லப்பட்டு 22ம் திகதிநல்லடக்கம் செய்யப்பட்டது. ஆம்! 29 ஆண்டுகளுக்கு முன் தமது பிரகடனத்தை வெளிப்படுத்தின அதே பேராலயத்தில் அவருக்கு அடக்க ஆராதனை நடத்தப்பட்டது.

# சிறார் சோலை



அன்பான தம்பி தங்கைகளே!

கிறிஸ்துகுறள்:- ''அதிகாலை ஆவலோடு தேடுவீரேல் -
கர்த்தரை உதயம் போல் கண்டடைவீரே
(ஜே. ரி).

இம் முறை உங்களுக்கு விகடமான கதை ஒன்று கூறப்போகி றேன். ஒருபாட்டி முற்றம் பெருக்கி கொண்டிருந்தாள். அப்போது ஐந்து ரூபாக் குத்தி ஒன்று அகப்பட்டது. அதைக் கொண்டு பன்றிக் குட்டி ஒன்றை விலைக்கு வாங்கினாள். பன்றிக் குட்டி வரமாட்டேன் என்றது. நாயிடம் போய் முறையிட்டாள், நாயும் அசையாது நின்றது தடியிடம் போய் முறையிட்டாள். தடியும் அசையாது நின்றது. நெருப் பிடம் போய் முறையிட்டாள். நெருப்பும் அசையாது நின்றது. தண்ணீ டம் போய் முறையிட்டாள். தண்ணீரும் அசையாது நின்றது. ஆட்டி டிடம் போய் முறையிட்டாள். ஆடும் அசையவில்லை. இறைச்சிக்கடை காரனிடம் முறையிட்டாள். அவனும் அசையாது நின்றான். எலியிடம் முறையிட்டாள். அதுவும் அசையவில்லை. பூனையிடம் முறையிட்ட போது - ''எனக்கு ஒரு பேணி பால் தந்தால் உதவுவேன்'' என்றது. மாட்டிடம் போய் பால் தருமாறு கேட்க, புல் தருமாறு கேட்டது.

புல்லை மாட்டுக்கு போட மாடு பால் கொடுத்தது. பாலை பூனைக்கு வைக்க பூனை எலியை துரத்தியது. எலி இறைச்சிக்கடைக் காரனின் கூரையை வெட்டபோயிற்று இறைச்சிக்கடைக்காரன் ஆட்டை வெட்டப்போக, ஆடு தண்ணீர் குடிக்கப்போக, தண்ணீர் நெருப்பை அணைக்கப்போக, நெருப்பு தடியை எரிக்கப், போக தடி நாயை அடிக் கப் போக, நாய் பன்றியை துரத்தப்போக பன்றி பாட்டியுடன் வீடு சென்றது

(இக்கதையை அனுப்பிவைத்தவர் பி. சுரேஸ்)

✻ ✻ ✻ ✻ ✻ ✻

ராமு:- தாயனை செல்கிறது பின்னுக்கு தகப்பன் யானை செல்கிறது இரண்டுக்கும் நடுவில் பிள்ளையானை செல்கிறது. பிள்ளை யானை - எனக்குப் பின்னுக்கு இரண்டு பேர்கள் வருவதாக சொல்கிறது. அது எப்படி?

சோமு:- (சற்று யோசித்து விட்டு) ''தெரியவில்லை........''

ராமு:- பிள்ளை யானைக்கு ஒன்று இரண்டு தெரியாது.

ஜோக் சதீஸ் டானியேல்

✻ ✻ ✻ ✻ ✻

## சென்றவாரப் புதிரின் விடை

'அகாஸ்வேரு'

✻ ✻ ✻ ✻ ✻ ✻

## இவ்வாரப் புதிர்

''சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பை கட்டளையிட்டார்' என்று சொல்லி தன்னை ''மாராள்'' என்று அழைக்கும்படி கூறியவள் யார்?

வேதத்தை புரட்டி விடையை தேடுங்கள் கண்டுபிடிக்க இய லாதவர்கள் அடுத்த இதழைப் புரட்டுங்கள்

சரியான விடையை அனுப்பிவைத்தவகள்-

பிரியதர்சினி கருணானந்தன்,
பெண்கள் இல்லம், சாவகச்சேரி.

கிறிஸ்டி ரமேஸ்
''தங்கமகால்'' அல்வாய்

அன்புச்சகோதர சகோதரிக்கு தாரகை அண்ணாவின் வாழ்த்துக்கள்!

சிறார்சோலைக்கு உங்களது ஆக்கங்களும் வரவேற்கப்படு கின்றன.

முகவரி:-

சிறார்சோலை
உதயதாரகை ஆதீனகாரியாலயம்
வட்டுக்கோட்டை

### தவறுக்கு வருந்துகிறோம்

சென்ற முறை அவ்வாரப் புதிரின் விடை 'நகோமி' எனத் தவறு தலாக குறிக்கப்பட்டு விட்டது. சரியான விடை 'யோசுவா' என்ப தாகும்- தவறுதலாக விடப்பட்ட இந்தப் பிழைக்கு மனம் வருந்து கிறோம்.

தாரகை அண்ணா

## சங்கக்கடைகள் மூடப்பட்டன

வடமராட்சி கிழக்கில் சுமார் பத்து சங்கக் கடைக் கிளைகள் மூடப்பட்டுள்ளன. செம்பியன் பற் றிலிருந்து மணற்காடு வரையுள்ள கிளைகளே மூடப் பட்டுள்ளன இதனால் இப்பகுதி மக்கள் தமது நாளாந்த உணவுத் தேவைக ளுக்குக் கஷ்டம் அடைகின்றனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

## தேவகௌடா அரசு தோல்வி

இந்தியாவில் தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்துள்ளது- இதனை யடுத்து ஐக்கிய முன்னணித் தலை மைப் பதவியிலிருந்து திரு. H. T. தேவகௌடா விலகியுள்ளார். ஐக்கிய முன்னணிக்கான புதிய தலைவர் எதிர்வரும் ஞாயிறு தெரிவு செய்யப்படவுள்ளார். புதிய தலைவர் தெரிவின் பின் மீண்டும் காங்கிரசின் ஆதரவுடன் ஐக்கிய முன்னணி அரசு அமைககும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## திருமணம்



காரைநகர் திருச்சபையைச் சேர்ந்த நல்லையா விக்டர் ஜெயக் குமார் (யாழ்ப்பாணக் கல்லூரி கணித ஆசிரியர்) அவர்கட்கும் யாழ் நகர்ப்புற திருச்சபையைச் சேர்ந்த லதி இறேஸ் பேதுருப் பிள்ளை (உசன் இராமநாதன் மகா வித்தியாலய ஆசிரியை) அவர்கட்கும் நகர்ப்புற திருச்சபை யில் 12-04-97 அன்று காலை 11.30 மணிக்கு திருமணம் நடை பெற்றது. திருமணத்தை வண. சூரியகுமார் அவர்களும் வண. பென்ஜமின் ஜெயராஜா அவர்க ளும் நடாத்தினர். மணமக்கள் நீடூழி வாழ உதயதாரகை வாழ்த்துகின்றது.

## நன்றி...

ப்பம் மிக்க அரசியலில், கிறிஸ்தவ விழுமியங்களை இணைத்து, அரசி யலை தூய்மைப்படுத்தியவர் செல்வா அவர் தம் பணிக்கு முன் மாதிரியாக இயேசுவை கொண்டி ருந்தார். சமூக நீதி மேலோங்க வும், மனித வாழ்வு மேம்படவும் அரசியல் இன்றியமையாதது எனவே அதில் பங்குபற்றவேண் டிய கடப்பாடு கிறிஸ்தவர்களுக்கு உண்டு என்பதை செல்வா தம் வாழ்வின் மூலம் நிரூபித்துள்ளார். எனவே இன்றைய கிறிஸ்தவர்க ளும், சரியான தலைமை இன்றி வாடும் தமிழ் பேசும் மக்களிற்கு சரியான அரசியலை வழங்க முன் வரவேண்டும் என ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் கூறினார்.

வண. S. S. கருணைராசா இறைவேண்டலில் சபைமக்களை வழிநடத்தினார். பேராயர் D J. அம்பலவாணரால் வழங்கப்பட்ட இறையாசியுடன் வழிபாடு நிறை வுற்றது.

## கருத்தரங்கு

கிழக்குப் பிராந்தியத்தில் பிள் ளைகள் மத்தியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் குருமாருக்கு மான ஒரு நாள் கருத்தரங்கு ஒன்று ஊறனி புனித யோவான் ஆலய மண்டபத்தில் நடைபெற் றது இக் கருத்தரங்கை இலங்கை திருச்சபைகளின் பிள்ளைகள் நலச் சங்க பணிப்பாளர் ANS ஜீவஜோதி ஒழுங்கு செய்திருந்தார் இக் கருத் தரங்குக்கு அனேக ஆசிரியர்களும் குருமாரும் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வழியனுப்பு விழா

வருகிற ஞாயிறு 27ம் திகதி மாலை 3 மணியளவில் தமது இறையியற் கல்வியை பூர்த்தி செய்து திருப்பணி விடைக்காக புறப்பட இருக்கும் திரு B. தேவ தாஸ், திரு S. குகனேஸ்வரன், திரு M. J. சுதர்சன், செல்வி A. டெய்சி ஆகியோருக்கு ஊழியர் வழியனுப்பு விழா யாழ்ப்பாணக் கல்லூரி ஓட்லி மண்டபத்தில் நடை பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## பக்ஸ் செய்திகள்

யாழ். தொலைத் தொடர்புப் பணியகத்தில 'பக்ஸ்' இயந்திரம் சரிவர இயங்காத காரணத்தால் அதன் சேவை தற்காலிகமாக நிறுத் தப்பட்டிருப்பதாகவும் அதனைச் சீரமைத்ததும் ''பக்ஸ்'' சேவை மீண்டும் ஆரம்பமாகும்என்றும்தெரி கிறது இதனால் தொலைத் தொடர்புப் பணியகத்தில் பக்ஸ் செய்திகள் ஏற்றுக் கொள்ளப்படு வது நிறுத்கப்பட்டுள்ளது.

## பாரட்டுகிறோம்

கொள்ளுப்பிட்டியில் அமைந் துள்ள கிறிஸ்தவ தமிழ் கலா மன்றம் நடாத்திய 1996ம் ஆண்டுக் கான கட்டுரைப் போட்டியில் இறையியல் கல்லூரி இறுதி ஆண்டு மாணவரான திரு M. J. சுதர்சன் அவர்கள் முதலாம் பரிசான தங்கப் பதக்கத்தை பெற்றுக்கொண்டார். இவரை உதயதாரகை வாழ்த்துகி ன்றது

## சிர்குலைவு

யாழ். வேம்படியில் உள்ள ஜென றேற்றரின் பாகம் ஒன்று பழுத டைந்த காரணத்தினால், மின்சா ரம் வழங்கப்படும் பகுதிகளுக்கான மின் விநியோகம் கடந்த இரு வாரங்களுக்கு மேல் தடைப்பட் டுள்ளது. தற்காலிக ஏற்பாடாக மேற்படி பழுதடைந்த பாகத்தை சுன்னாகத்தில் இருந்து, கொண்டு வந்து ஜெனறேற்ரரைத் திருத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாக இலங்கை மின் சார சபை பிரதிபொது முகாமை யாளர் தெரிவித்துள்ளதாக தெரி கிறது.

## மரணம்

விசுவமடு தென்னிந்திய திருச் சபையின் ஊழியன் ஜோன் செல் வம் அவர்களின் தந்தையார் தம்பு இரத்தினம் 31 -03- 97 அன்று காலமானார். 01- 04- 97 இறு திக் கிரியைகள் கனகராஜன்குளத் தில் நடைபெற்றது.

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீனக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் ஜி. நடராஜாவினால் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.